முருகப்பெருமான் துணை

**மகான் திருமாழிசை யாழ்வார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.08.2022**, சனிக்கிழமை

1. ஆறுமுக சக்தி வடிவானதொரு
   அரங்கமகா ஞான தேசிகனே
   ஏறுமுகம் இந்தப் பேருலகு அடைய
   ஏழாம்படை வீடு படைத்த ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
   ஞாலமதில் சுபகிருது யாளி திங்கள்
   இனிமைபட லாப திகதி காரி வாரம்
   (சுபகிருது வருடம் ஆவணி மாதம் 11 நாள், 27.08.2022 சனிக்கிழமை)
   இயம்பிடுவேன் அருளாசி தன்னை
3. ஆசிதன்னை திருமாழிசையாழ்வாரும்
   ஆற்றல்பட அரங்கமகான் வழி
   வாசி வெல்லும் ஞானப் படைகள்
   வையகமெங்கும் வளர உரைப்பேன்
4. உரைக்கவே தவ யோகம் என
   உடலை வருத்தும் வழிகளைவிட
   மறைபோற்றும் அரங்க ஞானி
   மாதரும வழிகளை ஆதரித்து
5. ஆதரித்து பிற ஜீவன் வருந்தா
   அன்னதான சேவை ஆற்றி
   பூதலத்தில் தயவெனும் தவமாம்
   புண்ணிய வழிகளை கடைபிடித்தாலே போதும்
6. போதுமப்பா இவனே கடைத்தேற
   பொக்கிஷமானவன் எனக் கருதி
   ஆதரவாய் அனைத்துமகா சக்திகளும்
   ஆற்றலாக வரம்பல தந்து
7. தந்துமே தானாக வாசி வசம்
   தணிகாசலனால் நடத்தப்பட்டு
   சிந்தை தெளிவு சகல வளமும்
   சித்தி முக்திகளும் பெற்று உயர நேரும்
8. நேருமை கொண்ட மக்களாய்
   ஞானவான்களாக உலகினில்
   பெருமைபட படைகள் பெருகி
   பேருலகம் ஆபத்து காணா மீளும்
9. மீளும் ஞானவான்கள் தலைமைக்கு
   மேலும் இயற்கை வளங்களோடு
   நாளும் ஞானிகளை போற்றி
   நம்பிக்கை தரும் ஞானவாழ்வாக மாறி

10. மாறியே மக்களிடை எந்தவகையும்
மத இன சாதி பேதா பேதமின்றி
அறிவு தெளிவு திடமுற சமத்துவ குண
ஆன்மீக ஞான சமதர்ம சன்மார்க்க

11. சன்மார்க்க வேதமாக நிரம்பி
சடாட்சரன் வழிவழி தேற்றம்
இன்பமாக உலகோர் கண்டுமே
இனிதே ஞானயுக மாற்றம் படைப்பர்
அருளாசி முற்றே

–சுபம்–